*IN THE COURT OF THE SUB JUDGE, MELUR*
*DEPOSITION OF WITNESS*
*OS 205/2022*

| | | |
|---|---|---|
| *Name* | : | *Ramachandran* |
| *Father's Name* | : | |
| *Village* | : | |
| *Taluk* | : | |
| *Caste* | : | |
| *Calling* | : | |
| *Religion* | : | |
| *Age* | : | |

*Solemnly affirmed in accordance with provisions Act of 1873 of the day of 23.01.2023*

**வா.சா.4 முதல் விசாரணை:-**

நான் நீதிமன்றத்திலிருந்து வந்த அழைப்பாணையின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். என்னுடைய ஆதார் அடையாள அட்டை அசலை கொண்டு வந்துள்ளேன். நகல் அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டு சா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. நான் 10ம் வகுப்பு பட்டயபடிப்பு படித்துள்ளேன். நான் எலெக்டீரிசியனாக வேலை செய்கிறேன். இந்த வழக்கு தாக்கல் செய்துள்ள பிரபாகரனை எனக்கு 7, 8 ஆண்டுகளாக தெரியும். அவர்கள் பகுதியில் நான் குடியிருந்தேன். வாதியும், பிரதிவாதி வசுமதிக்கும் இடையில் ஏதேனும் ஆவணங்கள் ஏற்படுத்தி கொண்டார்களா என்றால் கிரைய ஒப்பந்த பத்திரம் ஏற்படுத்திக்கொண்டார்கள். 18.03.2019ல் அவ்வாறு ஆவணம் ஏற்படுத்திக்கொண்டார்கள். அது பதிவு செய்யப்பட்ட ஆவணம்தான். சொக்கிகுளம் சார்பதிவாளர் அலுலகத்தில் பதிவு செய்ப்பட்டது. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.2 ஆவணம்தான் என்றால் சரிதான். அந்த ஆவணத்தில் நான் 2வது சாட்சியாக கையெழுத்து செய்துள்ளேன். அதிலுள்ள கையெழுத்து என்னுடையதுதான். எவ்வளவு தொகைக்கு கிரைய ஒப்பந்த பத்திரம் போடப்பட்டது என்றால் ரூ.7,03,500/-ற்கு போடப்பட்டது. வா.சா.ஆ.2 ஆவணத்தில் மற்றொரு சாட்சியாக வசுமதியின் கணவர் மருதசுரேஷ் சாட்சியாக கையொப்பம் செய்துள்ளார். ஒப்பந்த சொத்து கண்ணனேந்தலில் உள்ளது. வா.சா.ஆ.2 ஆவணத்திற்கு பின்னிட்டு வேறு ஆவணம் ஏற்படுத்தி கொண்டார்களா என்றால் அடுத்த ஆண்டு 2020ல் வேறு ஒரு ஆவணம் ஏற்படுத்திக்கொண்டார்கள். அந்த ஆவணம்

என்னிடம் காட்டப்படும் ஆவணம்தான் என்றால் சரிதான். (அது வா.சா.ஆ.3). அந்த ஆவணத்திலும் நான் சாட்சி கையெழுத்து செய்துள்ளேன். என்னுடன் மற்றொரு சாட்சியாக வசுமதியின் கணவர் மருதசுரேஷ் சாட்சியாக கையொப்பம் செய்துள்ளார். மேற்படி ஆவணம் சொக்கிகுளம் சார்பதிவாளர் அலுலகத்தில் பதிவு செய்யப்பட்டது.

**குறுக்கு விசாரணை:-**

நான் எந்த முகவரியில் வசித்து வருகிறேன் என்றால் ராமசந்திரன், 3/86A, M.S அக்ரஹாரம், பரமகுடி. இந்த முகவரிதான் என்னுடைய ஆதார் அட்டையிலும் உள்ளது. பிரபாகரன் எனது உறவினர் என்றால் இல்லை நண்பர். செல்வம் பைனான்சியரை எனக்குத் தெரியாது. பிரபாகரனை எனக்கு எவ்வாறு பழக்கம் என்றால் ஜி.ஆர் நகரில் நான் குடியிருக்கும்போது வாதி பிரபாகரன் பக்கத்து வீட்டில் குடியிருந்தார். 2019 கிரைய ஒப்பந்த பத்திரம் போடுவது சம்மந்தமாக இரண்டு நாட்கள் முன்பாக என்னிடம் வாதி தெரிவித்தார். கிரையத் தொகை எவ்வளவு பேசப்பட்டது, எவ்வளவு முன்பணம் கொடுக்க போகிறோம் என்ற விவரத்தை வாதி என்னிடம் தெரிவித்தாரா என்றால் ரூ.7,47,000/- தொகை மற்றும் முன்பணம் ரூ.4லட்சம் கொடுக்கப்போவதாக சொன்னார். 2020ல் ரூ.4லட்சம் முன்பணம் கொடுத்ததாக சொன்னார். 2019ல் பிரதிவாதிக்கு எவ்வளவு முன்பணம் கொடுக்கப்பட்டதாக சொன்னாரா என்றால் இல்லை. வேறு பணபரிமாற்றமும் என் முன்னிலையில் நடைபெறவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.2 கிரைய ஒப்பந்த பத்திரத்தில் சார்பதிவாளர் அலுவலகத்தில் வைத்து கையெழுத்து போட்டேன். பத்திர எழுத்தர் அலுவலகத்தில் வைத்து கையெழுத்து போடவில்லை. சார்பதிவாளர் அலுவலகத்தில் வைத்துதான் கையெழுத்து போட்டேன். மருதசுரேசை எனக்கு எப்போதிலிருந்து தெரியும் என்றால் பத்திரம் எழுதிய அன்றுதான் தெரியும். பிரதிவாதி-வசுமதியை எனக்கு தெரியுமா என்றால் கிரைய ஒப்பந்த பத்திரம் போட்ட அன்று பார்த்ததுதான். கிரைய ஒப்பந்த பத்திரம் எத்தனை மணிக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் ஞாபகமில்லை. 2020ம் தேதிய கிரைய ஒப்பந்த பத்திரம் எத்தனை மணிக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் ஞாபகமில்லை. பிரபாகரன் வட்டிக்கு பணம் கொடுத்து பைனான்ஸ் செய்து வரும் விவரம் எனக்குத் தெரியுமா என்றால் தெரியாது. பிரபாகரன் வட்டிக்கு கடன் கொடுக்கும் நபர்களிடம் கிரைய ஒப்பந்த பத்திரம் எழுதி வாங்குவார் என்றும், அதற்கு சாட்சியாக என்னை பயன்படுத்தி கொள்வார் என்றால் சரியல்ல. இது தவிர வேறு ஆவணத்தில் பிரபாகரன் சொல்லி நான் கையெழுத்து போட்டுள்ளேனா

என்றால் இல்லை. கண்ணனேந்தல் இடத்தை நான் சென்று பார்வையிடவில்லை. வா.சா.ஆ.2 கிரைய ஒப்பந்த பத்திரத்தை தயார் செய்த பத்திர எழுத்தர் பெயர் நல்லமணி வா.சா.ஆ.3 கிரைய ஒப்பந்த பத்திரத்தை தயார் செய்தவர் ஒரு வழக்கறிஞர். பணம் கொடுக்கல், வாங்கல் பற்றி எனக்கு நேரடியாகத் தெரியாது என்றால் சரிதான். பிரதிவாதி என்னிடம் கிரைய ஒப்பந்த தொகையை இதுபோல் வாங்கியுள்ளோம் என்பது பற்றி என்னிடம் சொல்லவில்லை. நான் இராமநாதபுர மாவட்டத்தை சார்ந்தவர் என்பதாலும், வாதியின் உறவினர் என்பதாலும், வாதி கடன் கொடுக்கும் நபர்களிடம் கிரைய ஒப்பந்த பத்திரம் போடும் ஆவணத்தில் சாட்சி கையெழுத்து போடுவது என்னுடைய வழக்கம் என்றால் சரியல்ல. நான் வாதி சொல்லி பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ஒப்பம்-S.கணேசன்
சார்பு நீதிபதி
மேலூர்